8. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஈ) தமிழ்நாடு தொழில் நடைமுறையை எளிதாக்குதல் சட்டமுன்வடிவு, 2009 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நடைமுறையை எளிதாக்குதல் சட்டமுன்வடிவைப் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2009) பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

12. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(ஔ) தமிழ்நாடு தொழில் நடைமுறையை எளிதாக்குதல் சட்டமுன்வடிவு, 2009

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நடைமுறையை எளிதாக்குதல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2009), மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நடைமுறையை எளிதாக்குதல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2009)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேல்முருகன், என்ன? சொல்லுங்கள். (குறுக்கீடு) கொஞ்சம் பொறுங்கள். திருத்தம் சொல்கிறீர்களா, என்ன சொல்கிறீர்கள்? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் மேம்பாட்டினை ஊக்கப்படுத்துவதற்கும் புதிய முதலீடுகள் செய்வதை எளிதாக்குவதற்கும் நடைமுறைத் தேவைப்பாடுகளைக் குறைத்து இங்கே ஒரு சட்டம் கொண்டு வரப்படுகிறது. ஏற்கெனவே தமிழ்நாட்டில் புதிய தொழில் நிறுவனங்களை உருவாக்குவதற்காக நிலம் கையகப்படுத்தித் தருவது, மின்சாரம் தருவது, அடிப்படை வசதிகளை

@ *20–7–2009 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.*